# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:149** **தேதி:-11.02.2017**

***BSNLன் புத்தாக்கத்திற்காக கூடுதலாக தினம் ஒரு மணி நேர பணி மற்றும் பல செய்திகள்***

அன்பார்ந்த தோழர்களே,

06.02.2017 அன்று புதுடெல்லியில் கூடிய அனைத்து சங்கங்களின் கூட்டத்தில், இந்த நிதி ஆண்டு நிறைவு பெறுவதற்கு முன் நிறுவனத்தின் செயல்திறனை அதிகப்படுத்தப்பட வேண்டும் என்றும், **அதற்காக ஊழியர்களும், அதிகாரிகளும் 10.02.2017 முதல் 31.03.2017வரை தினமும் ஒரு மணி நேரம் கூடுதலாக பணியாற்ற வேண்டும்** என்றும் அறைகூவல் விட்டுள்ளது. இந்த ஒரு மணி நேரத்தில் மார்க்கெட்டிங் மற்றும் பழுதுகளை நீக்குவது ஆகிய பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறைகூவலை BSNLன் CMD அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கும் போதே, இந்த பணியினை சங்கங்கள் செய்யும் போது அவர்களுக்கு மாவட்ட மாநில நிர்வாகங்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும், தேவையான உபகரணங்களை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டும் எழுதப்பட்டுள்ளது.

BSNLன் புத்தாக்கத்திற்காக அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் பல நடவடிக்கைகள் எடுத்துள்ள காரணத்தால் நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், ரிலையன்ஸ் ஜியோவின் வருகை மற்றும் பண மதிப்பின்மை ஆகியவற்றின் காரணமாக புத்தாக்கல் முயற்சி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மத்திய அரசாங்கமும், TRAIயும் ரிலையன்ஸ் ஜியோவிற்கு வழங்கி வரும் நேரடி ஆதரவு என்பது BSNL நிறுவனத்திற்கு பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில், 31.03.2017ல் நிறைவு பெற உள்ள இந்த நிதி ஆண்டில் நிறுவனத்தில் வருமானமும், உற்பத்தித் திறனும் அதிகரிப்பதற்கான அனைத்து சாத்தியமான முயற்சிகளையும், ஊழியர்கள் எடுக்க வேண்டியது மிக மிக அவசர அவசியமாகும். குரல் அழைப்புகள் மற்றும் DATAக்களுக்கான BSNLன் புதிய திட்டங்களை பொது மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தப் பட வேண்டும். ரிலையன்ஸ் ஜியோவின் போட்டியை சந்திக்க இது மிகப்பெரிய அளவில் பயன்படும்.

எனவே நமது மாவட்ட கிளை சங்கங்கள், இதர சங்கங்களை ஒன்றுபடுத்தி தினம் ஒரு மணி நேரம் அதிகமாக பணியாற்றுவது என்கிற முடிவை அமலாக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**கவர்னர் மாளிகை மற்றும் ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணி:-** BSNLஐ தனியார்மயமாக்கல்/ கேந்திர பங்கு விற்பனை ஆகியவை தொடர்பான நிதி ஆயோக் அறிவித்திருந்த முடிவுகளின் அமலாக்கம் தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட கடிதத்தினை எதிர்த்தும், துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்தும், 4G சேவையினை BSNL நிறுவனம் வழங்குவதற்கு 700 MHz ஸ்பெக்ட்ரத்தை இலவசமாக வழங்க கோரியும், ரிலையன்ஸ் ஜியோவிற்கு வழங்கப்படும் சலுகைகளை எதிர்த்தும், 2017, மார்ச் மாதம் 9ஆம் தேதி கவர்னர் மாளிகை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணி நடத்துவது என்றும் 06.02.2017

அன்று நடைபெற்ற அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பேரணியினை நமது மாவட்ட மாநில சங்கங்கள் திறமையாக நடத்திட வேண்டும்.

**அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய்யக்கூடாது என்கிற உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமல் படுத்துக:-** ஊழியர்களுக்கு தவறுதலாக வழங்கப்பட்ட அதிகப்படியான பணத்தை பிடித்தம் செய்யக் கூடாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த தீர்ப்பை அமலாக்க வேண்டும் என அரசாங்கம் DOP&T மூலமாக உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் DOP&Tயின் உத்தரவை DOT, ENDORSE செய்யவில்லை என்று கூறி BSNL நிறுவனம் அதனை அமலாக்க மறுக்கிறது. BSNL நிறுவனமே உச்சநீதிமன்ற உத்தரவை அமலாக்கலாம் என DOT நமது மத்திய சங்கத்திடம் தெரிவித்துள்ளது. எனவே உச்சநீதிமன்ற உத்தரவை அமலாக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் வற்புறுத்தி மனிதவள இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளது.

**நேரடி நியமன JEக்களின் தேர்வு தொடர்பாக மனிதவள இயக்குனருடன் சந்திப்பு:-** DOTயின் தலையீடு காரணமாக நேரடி நியமன JE தேர்வு முடிவுகள் வெளியாவது காலதாமதப்படுத்தப்பட்டது. நமது மத்திய சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாக 2700 பேர் தேர்வு பெற்றதாக பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணைத்தலைவர் தோழர் அசோகா பாபு ஆகியோர் 06.02.2017 அன்று மனித வள இயக்குனர் திருமிகு சுஜாதாரே அவரகளை சந்தித்து நன்றி தெரிவித்தனர். மேலும் சில தோழர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்த பிரச்சனைக்கு தீர்வு காண கூடுதல் பதவிகளை அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக GM(Rectt) மற்றும் DIRECTOR(HR) ஆகியோரிடம் விவாதித்துள்ளனர். டெல்லிக்கு வெளியே சென்றுள்ளதால் CMD BSNL அவர்களை அன்றைய தினம் சந்திக்க இயலவில்லை. இது தொடர்பான தொடர் முயற்சிகளை மத்திய சங்கம் மேற்கொள்ளும்.

**ஓய்வூதிய நிதி அறங்காவலர் குழுவில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு பிரதிநிதித்துவம்:-** சமீபத்தில் உருவாக்கப்பட்ட ஓய்வூதியர் நிதி அறங்காவலர் குழுவில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்படாததற்கு தங்களின் கடுமையான கண்டனத்தை நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணைத்தலைவர் தோழர் அசோகா பாபு ஆகியோர் DIRECTOR (HR), COMPANAY SECRETARY மற்றும் GM(SR) ஆகியோரை சந்தித்து தெரிவித்துள்ளனர். நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஊழியர்கள். எனவே ஊழியர்களின் அங்கீகாரம் பெற்றுள்ள சங்கங்களின் பிரதிநிதிகளை அதில் உறுப்பினர்களாக நியமிக்காததை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள அவர்கள் இது தொடர்பாக CMD BSNL உடன் விவாதிக்க உள்ளனர்.

**35,000 Wi-Fi HOTSPOTகள் அமைப்பதற்காக L&T உள்ளிட்ட நிறுவனங்களுக்கு 1000 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம்:-** BSNL நிறுவனம் 35,000 Wi-Fi HOTSPOTகள் அமைப்பதற்காக L&T உள்ளிட்ட நிறுவனங்களிடம் ஒப்பந்தம் போட்டுள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன. 2018 மார்ச் மாதத்திற்குள் இந்த HOTSPOTகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த HOTSPOT மூலமாக 4Gஐ விட அதிகமான வேகத்தில் DATA சேவைகளை தர முடியும். இதற்கான கருவிகள் ஏற்கனவே வாங்கப்பட்டு விட்டதாகவும், இந்த மாதத்திலிருந்தே இவற்றை நிர்மாணிக்கும் பணிகள் துவங்கும் என்றும் பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

**மீண்டும் BSNL சாதனை:-** கடந்த ஜனவரி மாதத்திலும் BSNL நிறுவனம் 20 லட்சத்திற்கும் அதிகமான மொபைல் இணைப்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ளது. உ.பி(கிழக்கு) மாநிலம் 2,31,220 சந்தாதாரர்கள், ராஜஸ்தான் மாநிலம் 1,83,739 சந்தாதாரர்கள், ஆந்திரா 1,77,294 சந்தாதார்கள் என முதல் மூன்று இடங்களில் உள்ளன. மொத்தம் 20,63,827 புதிய இணைப்புகளை BSNL நிறுவனம் வழங்கியுள்ளது. இதற்காக பாடுபட்ட ஊழியர்களையும் அதிகாரிகளையும் BSNL ஊழியர் சங்கம் மனதார வாழ்த்துகிறது.

ரிலையன்ஸ் ஜியோ கடுமையான போட்டியில் இறங்கியுள்ள இந்த சூழலில் BSNL நிறுவனம் இந்த சாதனையை செய்ய முடிந்திருக்கிறது. BSNL அறிமுகப்படுத்தியுள்ள வரம்பில்லாத அழைப்புகள் மற்றும் 1GB டேட்டா 36 ரூபாய் என்பது உள்ளிட்டவைகளும் இந்த வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றியுள்ளது. இந்த சூழ்நிலையில் தான் 10.02.2017 முதல் 31.03.2017 வரை தினமும் அதிகப்படியாக ஒரு மணி நேரம் பணியாற்றிட வேண்டும் என அனைத்து சங்கங்களும் அறைகூவல் விட்டுள்ளன. இந்த கால கட்டத்தில் நமது புதிய கட்டணங்களையும் திட்டங்களையும், மேளாக்கள், ரோட்ஷோக்கள் உள்ளிட்டவைகளை மூலம் கடுமையாக நாம் பிரச்சாரம் செய்திட வேண்டும். இது நிறுவனத்தின் வருவாய் மற்றும் சந்தாதாரர் எண்ணிக்கை ஆகியவற்றை பெரிய அளவில் அதிகரிக்கும்.

**ரிலையன்ஸ் ஜியோ போட்டியாளர்களை கொல்கிறது என ஏர்டெல் நிறுவனம் புகார்:-** துவக்க கால சலுகைகள் வழங்க அனுமதிக்கப்பட்ட 90 நாட்களையும் தாண்டி ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் இலவசமாக குரல் அழைப்புகளையும் டேட்டாக்களையும் வழங்கி வருகிறது. இதன் மீது ஏர்டெல் நிறுவனம் அளித்த புகாரை TRAI தள்ளுபடி செய்து விட்டது. போட்டியாளர்களை கொல்கிறது என்ற புகாரோடு தற்போது ஏர்டெல் நிறுவனம் COMPETITION COMMISSION OF INDIAவில் புகார் கொடுத்துள்ளது. இந்தியாவிலோ, வெளி நாட்டிலோ, எந்த ஒரு நிறுவனமும் இலவசமாக வரம்பில்லா சேவைகளை தருவதில்லை என ஏர்டெல் நிறுவனம் கூறியுள்ளது. ரிலையன்ஸ் ஜியோ அதிக அளவிலான சந்தாதாரர்களை பெற்ற பின் அது தனது கட்டணங்களை உயர்த்தும் எனவும் ஏர்டெல் நிறுவனம் தெரிவித்துள்ளது. COMPETITION COMMISSION OF INDIA என்ன சொல்கிறது என்று நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**